செய்தி வெளியீடு எண்.654 நாள்: 4.8.2010

## செய்தி வெளியீடு

## 13 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்கிட மேலும் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்!

## 8,600 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு!

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் கையெழுத்து!

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், மாண்புமிகு துணை முதமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம், வீடியோகான் நிறுவனம், ஜே.கே.டயர்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் மூலம் தமிழகத்தில் அமைக்கப்படவுள்ள மூன்று புதிய தொழில் நிறுவனங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று (4.8.2010) நடைபெற்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

முதலாவதாக, தமிழகத்தில் அதிகரித்துவரும் எரிவாயுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், இந்தியன் ஆயில் நிறுவனமும் இணைந்து, எண்ணூர் துறைமுகத்திற்கு அருகில் காட்டுப்பள்ளி கிராமத்தில் ஆண்டுக்கு 5 மில்லியன் டன்கள் கையாளும் திரவநிலை எரிவாயு முனையம் ஒன்றினை அமைத்து, அதிலிருந்து ஏறத்தாழ 20 மில்லியன் கனமீட்டர் எரிவாயுவை குழாய்க் கட்டமைப்புகள் மூலம் மின்உற்பத்தி நிறுவனங்களுக்கும், உரத் தொழிற்சாலைகளுக்கும், பிற தொழிற்சாலைகளுக்கும், போக்குவரத்து மற்றும் நகர்ப்புற எரிவாயுத் தேவைகளுக்கும் விநியோகிப்பதற்காக புதிய தொழில் நிறுவனம் ஒன்றையும், அதன் ஒரு பகுதியாக மின்உற்பத்தித் திட்டத்தையும், ஏறத்தாழ பத்தாயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்திடத் திட்டமிட்டுள்ளன. ஏறத்தாழ ஏழாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கக்கூடிய இத்திட்டத்தை நிறுவுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் சார்பில் அதன் தலைவரும், தொழில்துறை முதன்மைச் செயலாளருமாகிய திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் இயக்குநர் திரு.பி.எம். பன்சல் ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்தியன் ஆயில் நிறுவன செயல் இயக்குநர்கள் திரு. ஏ.கே.மர்சன்டா, திரு. டி.எஸ்.எல். பிரசாத், பொது மேலாளர் திரு.வி.தாமோதரன், முதன்மைச் செயல் அலுவலர் திரு.சஞ்சீவ் குப்தா ஆகியோர் உடனிருந்தனர்.

இரண்டாவதாக, வீடியோகான் நிறுவனம் 5 ஆண்டுகாலத்தில் 1500 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில்

**எல்.சி.டி., பிளாஸ்மா தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட பல்வகையான மின்னணுப் பொருள்களையும் வீட்டு உபயோகப் பொருள்களையும் அவற்றிற்குரிய உதிரி பாகங்களையும் தயாரிக்கக்கூடிய யூனிட்டி அப்ளையன்சஸஸ் லிமிடெட் நிறுவனம் புதிய தொழிற்சாலை ஒன்றை மானாமதுரை சிப்காட் தொழிற்சாலைப் பூங்காவில் அமைக்கவிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இத்தொழிற்சாலைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., யூனிட்டி அப்ளையன்சஸ் நிறுவனத்தின் சார்பாக அதன் இயக்குநர் திரு. பிரதீப்குமார் என்.தூத் ஆகியோர் கையெழுத்திட்டனர். இயக்குநர் திரு.சஞ்சய் மெஹ்ரா, முதுநிலை மேலாளர் திரு.பி. என். ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.**

**மூன்றாவதாக, டயர் உற்பத்தியாளர்கள் தர வரிசையில் உலகில் 22வது இடத்தைப் பெற்றுள்ள ஜே.கே. டயர்ஸ் நிறுவனம் காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூரில் ஜே.கே. டயர்ஸ் அன்ட் இன்டஸ்ட்டிரீஸ் நிறுவனம் என்னும் புதிய டயர் தொழிற்சாலையை அமைத்திட முடிவு செய்துள்ளது. 5 ஆண்டுகால அளவில் 1500 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறத்தாழ 600 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்புகளை வழங்கவிருக்கும் இந்த புதிய டயர் தொழிற் சாலையை நிறுவுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (4.8.2010) நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு. ராஜீவ்ரஞ்சன், இ.ஆ.ப., ஜே.கே.டயர்ஸ் இன்டஸ்ட்டிரீஸ் நிறுவனத்தின் சார்பாக அதன் நிறுவனத் தலைவர் மற்றும் இயக்குநர் திரு.அருண் கே.பஜோரியா ஆகியோர் கையெழுத்திட்டனர். ஜே.கே. டயர்ஸ் அன்ட் இன்டஸ்ட்டிரீஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் டாக்டர் ரகுபதி சிங்கானியா, ஆலோசகர் திரு.வி.கே.மாத்தூர், தொழில்நுட்ப இயக்குநர் திரு.வி.கே.மிஸ்ரா, திட்டங்களுக்கான துணை நிறுவனத் தவைர் திரு.என்.தங்கராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.**

**இந்த மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் நடைபெற்றபொழுது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் செயல்துணைத் தலைவர் திரு. எம்.வேல்முருகன், இ.பொ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.**

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.